நகராட்சி அலுவலகம்
அம்பாசமுத்திரம்
நாள்.12.03.2020

## சாதாரணக்கூட்டம்

அம்பாசமுத்திரம் நகர் மன்றத்தின் அவசரக்கூட்டம் 2020ம் வருடம் மார்ச் மாதம் 12ம்தேதி (12.03.2020) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தனி அதிகாரி அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரஙகில் வைத்து நடைபெறும்.

தனி அலுவலர்/ஆணையாளர்(பொ)
அம்பாசமுத்திரம் நகராட்சி

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 12.03.20 | 620 | **பொருள் : 1**<br>வார்டு மறுவரையறை ஆணையம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி, இந்நகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட வார்டு மறுவரையறைக்கான கருத்துருவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதை அடுத்து தமிழ்நாடு அரசிதழ் எண்.407, நாள்.14.12.2017ல் வார்டு மறுவரையறைக்கான தமிழக அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டது குறித்து அறிக்கை வெளியிடப்பட்டது.<br>இதனை அடுத்து உள்ளாட்சி அமைப்புகளில் 9 மாவட்டஙகளுக்கு வார்டு மறுவரையறை மேற்கொள்ளுதல் தொடர்பாக, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட 13.01.2020ம் தேதிய காணொளி காட்சி கூட்டத்தில் சில அறிவுரைகள் வழஙகப்பட்டது. இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.575/2020/தேர்தல், நாள்.21.01.2020ல் வார்டு மறுவரையறையினை மறு அறிவிக்கை செய்வது நிமித்தம் உரிய கருத்துரு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இதன் பொருட்டு வார்டு மறுவரையறையினை மறுஅறிவிக்கை செய்ததற்கான கருத்துரு உரிய வழிமுறையாக தமிழ்நாடு வார்டு மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க மன்றம் தனது தீர்மான எண்.600, நாள்.05.02.2020 ஒப்புதலின்படி, வரைவு வார்டு மறுவரையறை பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டது. வரப்பெற்ற ஆட்சேபணை மனுக்கள் அனைத்தும் தமிழ்நாடு மாநில மறுவரையறை ஆணைய விதிகள்6(1) ன்படி 2011 மக்கள் தொகை மற்றும் 31.03.2019 குடியிருப்பு வீடுகளின் அடிப்படையில் வார்டு மறுவரையறை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் ஆட்சேபணைகள் ஏற்கும் வகையில் அமையப்பெறவில்லை. மேலும், தமிழ்நாடு மாநில மறுவரையறை ஆணையத்தின் தலைவர் அவர்களின் மண்டல அளவிலான கருத்துக்கேட்பு கூட்டம் 10.03.2020 அன்று நடைபெற்றதில் ஆட்சேபணை கருத்துக்கள் மீது பரிசீலணை மேற்கொள்ளப்பட்டது. ஆட்சேபணைகள் அனைத்தும் விதிகளின்படி ஏற்றுக்கொள்ளும் வகையில் அமையப்பெறவில்லை என்பதால் நிராகரிக்கப்பட்டதால், இறுதி வார்டு மறுவரையறை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>12.03.20</td>
<td>621</td>
<td>
பொருள் : 2<br>
அம்பாசமுத்திரம் நகராட்சியில் மூலதன மானிய நிதி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதி (Capital Grant Fund and O&M Gap Filling Fund) 2020-2021ம் வருடத்தில் கீழ்க்கண்ட விபரப்படி உள்ள வடிகால் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின்பெயர்</th><th>மதிப்பீடு ரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>21 வது வார்டு எழில் நகர், 5&6 புதுக்கிராமம் தெரு, 14வது வார்டு திலகர்புரம் தெரு (கல்யாணி தியேட்டர் மேல்புறம்) மற்றும் 11வது வார்டு மணலோடை தெரு வடிகால் கட்டும் பணி</td><td>50.00</td></tr>
<tr><td>2</td><td>அம்பாசமுத்திரம் பாபநாசம் மெயின்ரோடு, 4வது வார்டு சிவகாமிபுரம் மெயின்ரோடு வடிகால் கட்டும் பணி</td><td>50.00</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>100.00</td></tr>
</table>
(ந.க. எண்.2084/2019/இ1)
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>622</td>
<td>
பொருள் எண்: 3<br>
அம்பாசமுத்திரம் நகராட்சி வார்டு எண் 14 பண்ணை சங்கரய்யர் நகரில் உள்ள பூங்கா பழுது பார்த்து பராமரிப்பு செய்யும் பணியினை தேர்வு செய்தும், மேற்காண் பணி மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும். மேற்காண் பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>
(ந.க.எண். 2086 /2019 /இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>623</td>
<td>
பொருள் எண்: 4<br>
அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை நினைவூட்டும் விதமாக விளம்பரங்கள், பிளக்ஸ் போர்டு மற்றும் பென்டிரைவ்வில் பதிவு செய்து ஒலிபெருக்கி மூலமாக விளம்பரம் செய்யும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் முன் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலை விபரம்</th><th>விஜய் ஆர்ட்ஸ் அம்பாச முத்திரம் ரூ.</th><th>ஸ்ரீ கிருஷ்ணா ஆர்ட்ஸ், அம்பாச முத்திரம் ரூ.</th><th>ஸ்ரீ ராம் ஆர்ட்ஸ், அம்பாச முத்திரம் ரூ.</th></tr>
<tr><td>1</td><td>வரியினஙகள் செலுத்தக் கூடிய அறிவிப்பு வாசகஙகளை ப்ளக்ஸ் போர்டு மூலம் 8x4 அளவில் தயார் செய்து தாஙகள் கூறும் இடத்தில் மாட்டித்தர பொருள் மற்றும் கூலி உட்பட போர்டு ஒன்றுக்கு</td><td>2750/–</td><td>3000/–</td><td>3250/–</td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | மேலே உள்ளபடி அறிவிப்பு போர்டு 5x4 அளவில் தயார் செய்து மாட்டித்தர போர்டு ஒன்றுக்கு | 1500/– | 1600/– | 1750/– |
| 3 | நகராட்சி ஆட்டோவில் ப்ளக்ஸ் பேனர் மூலம் வாசகம் அமைத்து வாகனத்தில் ஒட்டித்தர போர்டு ஒன்றுக்கு | 200/– | 250/– | 300/– |
| 4 | நோட்டீஸ் 7000 எண்ணம் அடித்துதர | 6500/– | 7000/– | 7250/– |
| 5 | பென்டிரைவ் ஒன்றுக்கு | 475/– | 500/– | 600/– |
| 6 | நீரேற்று நிலையம் மற்றும் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க உட்பட 8 இடங்களில் கேட் கதவு, சன்னல் பெயிண்டிங & காம்பவுண்டு சுவர் சுனோசம் அடித்து வாசகம் எழுதிட பெயிண்ட் கூலி உட்பட | 15200/– | 16500/– | 18000/– |
| 7 | அறிவிப்பு வாசகங்கள் 4x3 அளவில் பின்சீட் போர்டில் பெயிண்ட் அடித்து எழுதித்தர ஒன்றுக்கு | 500/– | 550/– | 600/– |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளிக் கொடுத்துள்ள விஜய் ஆர்ட்ஸ், அம்பாசமுத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை அங்கீகரித்து மன்றம் அனுமதி வழுஙகலாம். மேலும், செலவினத்தொகை ரூ.44,850/–ஐ குடிநீர் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கு.

| | | | |
|---|---|---|---|
| | 624 | **பொருள் : 5**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி கணினி பிரிவு வரிவசூலுக்குரிய EPSON LX 310 பிரிண்டர் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்த வகைக்கு Pegasus Sales &Services, Cheranmahadevi பில்படி ரூ.7700/– வழஙகிட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்க ப்பட்டது |
| | 625 | **பொருள் : 6**<br>மண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள் திருச்செந்தூரில் டாக்டர். சிவந்தி ஆதித்தனார் மணி மண்டப திறப்பு விழாவிற்கு வருகை தந்ததை முன்னிட்டு தினத்தந்தி சிறப்பு மலரில் அம்பாசமுத்திரம் நகராட்சியின் திட்ட பணி சாதனைகளை 22.02.2020 அன்று வெளியிட்டமைக்கு வரப்பெற்ற பில் தொகை ரூ.20,135/– வழஙகிட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்க ப்பட்டது |
| | 626 | **பொருள்: 7**<br>நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் தொடர்பாக அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய வார்டு மறுவரையறை பணிகள், வாக்குச்சாவடி பட்டியல்கள், வரைபடங்கள் மற்றும் தொடர்புடைய இதர பணிகள் ஆகியவை தயார் செய்யும் பொருட்டு உத்தேச செலவினத் தொகை ரூ. 1.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. | அனுமதிக்க ப்பட்டது |

<table>
<tr><td></td><td>627</td><td>பொருள் : 8<br>அம்பாசமுத்திரம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் கீழ்காணும் வாகனங்களுக்கு மோட்டார் வாகன ஆய்வாளரிடம் தகுதிச்சான்று (FC) பெறுவதற்காக பழுது நீக்கம் செய்வதற்காக 10.02.2020 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்</th><th>வாகன விபரம்</th><th>நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி</th><th>சுந்தரம் மோட்டார் ஒர்க்ஸ், திருநெல்வேலி</th><th>உமா ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி</th></tr><tr><td>1</td><td>TN76AX4305 - TATA ACE</td><td>35730</td><td>37580</td><td>38200</td></tr><tr><td>2</td><td>TN76AX4313 - TATA ACE</td><td>34530</td><td>36515</td><td>36800</td></tr><tr><td>3</td><td>TN76AX4307 - TATA ACE</td><td>36900</td><td>37500</td><td>38300</td></tr></table><br>வ.எண்.1 முதல் 3 வரையிலான வாகனங்களுக்கு பழுது நீக்கம் செய்யும் பணிகளுக்காக வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் திருநெல்வேலி, நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம். செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>628</td><td>பொருள் : 9<br>அம்பாசமுத்திரம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் குடிநீர் நிதி 2020–21 வருடாந்திர டெண்டர்கள் தினமணி நாளிதழில் 12.03.2020 அன்று வெளியிட்டமைக்கு வரப்பெற்ற பில் தொகை ரூ.21,308/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>629</td><td>பொருள் : 10<br>அம்பாசமுத்திரம் நகராட்சியின் 14வது மத்திய நிதிக்குழு ஆணைய நிதி 14th CFC (2019–20) திட்டப்பணிகளின் ஒப்பந்தபுள்ளி விளம்பரம் தினபூமி நாளிதழில் 10.01.2020 அன்று வெளியிட்டமைக்கு வரப்பெற்ற பில் தொகை ரூ.11,844/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>630</td><td>பொருள் : 11<br>அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலகத்திலுள்ள அனைத்துப் பிரிவுகளுக்கும் தேவையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் (All Stationery Items) 2020–21 ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்திடவும் அதற்கான பட்டியல் தொகை வருவாய் நிதியிலிருந்து வழங்கிடவும், மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

தனி அலுவலர்/ஆணையாளர்(பொ)
அம்பாசமுத்திரம் நகராட்சி